ஆளத்தெரியாத - நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசுக்கு எதிராகத் திரண்ட மகளிர்!



த.வெ.க. அரசின் சட்டம்–ஒழுங்குச் சீர்கேடு, பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பின்மை, விலைவாசி உயர்வைக் கண்டித்து, கரூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு மிக எழுச்சியுடன் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் நந்தினி தேவி தலைமையில் நிரஞ்சனா செந்தில்குமார், கவிதா கல்யாண சுந்தரம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் மகளிர் பங்கேற்றனர்.



அரியலூர் மாவட்ட மகளிர் அணி சார்பில் த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு,பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி அரியலூரில் பேரறிஞர் அண்ணாசிலை அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில வலைதள மகளிர் அணி பொறுப்பாளர் ரியா கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனாசாமிநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில் நாகை அவுரித்திடலில் நிர்வாக திறமையற்ற டம்மி முதல்வர் விஜய் ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள், பெண்குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வு மற்றும் கட்டுக்கடங்கா போதை பொருள் நடமாட்டத்தைக் கண்டித்து மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் த. தமயந்தி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புவனேஸ்வரி செந்தில் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் தலைமை கழகத்தை சேர்ந்த கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி மற்றும் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியை சேர்ந்த துணை அமைப்பாளர்கள், மகளிர்கள், கழகத்தினர் உள்ளனர்.



திருச்சியில் த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து மத்திய வடக்கு மற்றும் கிழக்கு தொகுதி மகளிர் அணி சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யா னந்த் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, துறையூர் கிருபா, ரம்யா பேகம் ,கவிதா மாணிக்கம், விஜயா ஜெயராஜ், திவ்யா கலைச்செல்வி, வாசுகி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில் த.வெ.க அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து தஞ்சையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி ஆலோசனைக்குழு உறுப்பினர் காரல்மார்க்ஸ், மாநில கல்வியாளர் அணி துணைச் செயலாளர் அனிச்சம் கனிமொழி மற்றும் மகளிர் அணியினர் த.வெ.க அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.



டம்மி முதலமைச்சர் விஜயின் திறனற்ற ஆட்சியின் விளைவாய் அவதியுறும் பெண்களுக்கு நியாயம் வேண்டி திருவாரூர் மாவட்ட தி.மு.க. மகளிரணி சார்பில் பிரமாண்ட ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஷோபா கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் விமலா பாலு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.